JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-2 - Witness
for Prosecution

CC No. 99/2025 Crime No. 400/2024 Station Ammapettai

| | | | |
|---|---|---|---|
| Name | PW. 2 தாயம்மாள் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.Kowsalya, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 05.08.2026 | | | |

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கத்திரிக்காய் காட்டில் குடியிருந்து கொண்டு முதுமை காரணமாக வீட்டில் இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு அடையாளம் தெரியும். ஆஜர் எதிரிகள் எனது மகளின் மாமனார் மற்றும் கொழுந்தனார் ஆவார்கள். அ.சா.1 பிரியா எனது மகள் ஆவார். எனது மகளுக்கும் எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை இருந்து வந்தது. எதிரிகள் அவ்வப்போது கதவைத் தட்டி பிரச்சினை செய்வார்கள்.

தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பு ஒருநாள் இரவு எதிரிகள் இருவரும் கதவை தட்டினார்கள். நான் எனது மகளிடம் சொன்னேன். எனது மகள் எழுந்து கதவை திறந்து வெளியே வந்தார். அப்போது எதிரிகள் இருவரும் எனது மகளை அடித்தார்கள். விளக்கி விடச் சென்ற எண்ணையும் இருவரும் அடித்து விட்டார்கள். தடியால் எனது காதில் அடித்ததால் எனக்கு காது கேட்பதில்லை. பின்னர் எனது மகளுக்கு ஏற்பட்ட காயத்திற்காக அவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரியல்ல. நான் எதுவும் சொல்லவில்லை. எனது மகள் தான் சொன்னால் எனது மகள் சொத்து கேட்டதால் ஆஜர் எதிரிகளுடன் பிரச்சனை

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.05 17:42:36 +0530

இருந்து வந்தது என்றால் சரிதான். ஒன்றாம் எதிரி அப்போது எனது பேரன் பெயரில் ½ ஏக்கர் நிலம் எழுதி தருவதாக சொன்னார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. நான் முதல் விசாரணை சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் என்னையும் எனது மகளையும் ஆஜர் எதிரிகள் அடிக்கவில்லை என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.05 17:42:43 +0530

Sd/- (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-1 - Witness
for Prosecution

CC No. 99/2025 Crime No. 400/2024 Station Ammapettai

| | | | |
|---|---|---|---|
| Name | PW.1 பிரியா | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.Kowsalya, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 05.08.2026 | | | |

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கத்தரியாங்காட்டில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். எதிரி பத்தரன் எனது கொழுந்தனார் பச்சமுத்து எனது மாமனார் ஆவார். எனக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலம் தொடர்பான பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 14/9/ 2024 ஆம் தேதியன்று இரவு சுமார் 11:30 மணியளவில் நான் வீட்டுக்குள் தூங்கிக் கொண்டிருந்தேன். அப்போது கதவு தட்டும் சத்தம் கேட்டது. கதவை திறந்து வெளியே வந்து பார்த்த பொழுது எனது கொழுந்தனாரும் மாமனாரும் நின்று கொண்டு இருந்தார்கள். அப்போது எனது மாமனாரும் கொழுந்தனாரும் என்னை பார்த்து உனக்கு என்ன சொத்து வேண்டுமா உனக்கு சொத்து எல்லாம் கிடையாது.

நீ எங்கிருந்து வந்தாயோ அங்கேயே உன் அம்மாவையும் இரண்டு குழந்தைகளையும் சென்றுவிடு என்று கூறினார்கள். பிறகு இருவரும் எனது முடியை பிடித்து வெளியே இழுத்து வந்தார்கள். இப்போது அங்கிருந்த தடியால் எதிரிகள் இருவரும் என்னை எனது உடல் முழுவதும் அடித்தார்கள். எனது அம்மாவையும் அடித்தார்கள். தடியால் மண்டையில் அடித்த பொழுது எனது மண்டை உடைந்து விட்டது. அப்போது சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் வந்தார்கள். எதிரிகள் என்னை தகாத வார்த்தைகளால் திட்டிவிட்டு இந்த தடியால் அடித்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி தடியை அங்கே போட்டுவிட்டு சென்று விட்டார்கள்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.05 17:42:49 +0530

பின்னர் நான் சிகிச்சைக்காக அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்கு மூலம் பதிவு செய்தார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரிகள் அடித்த தடியை எனக்கு அடையாளம் தெரியும். நீதிமன்றத்தில் உள்ள தடியால் தான் எதிரிகள் என்னை அடித்தார்கள். **அந்த தடி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் போலீசார் என்ன எழுதியுள்ளார்கள் என்கிற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சண்டை நடந்து ஆறு நாட்கள் கழித்து தான் நான் புகார் கொடுத்தேன் என்றாலும், அதற்கு இடைப்பட்ட நாளில் எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் சமாதானம் பேசப்பட்டது என்றால் சரியல்ல. சமாதானம் எதுவும் பேசவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும் 14 /9/ 2024 தேதி நடந்ததாக சொல்லும் சண்டைக்கு 20/9/2024 ஆம் தேதி தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் தலைமறைவு ஆனதால் தான் வழக்கு பதிவு செய்யாமல் இருந்து வந்தது. எனது மாமனாரான ஒன்றாம் எதிரிக்கு 1 1/2 ஏக்கர் சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது கணவரின் இறப்பிற்கு பின்னிட்டு எனது மாமனாரின் சொத்தில் சரி பாதி கேட்டேன் என்றால் சரிதான்.

அப்போது எனது மாமனார் ஒன்றாம் எதிரி அவரது பெயரில் 1/2 ஏக்கரும் எனது குழந்தைகளின் பெயரில் 1/2 ஏக்கரும் இரண்டாம் எதிரி பெயரில் 1/2 ஏக்கர் எழுதி தருவதாக என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். ஒன்றாம் எதிரி என்னிடம் தான் உயிருடன் இருக்கும் வரை அந்த 1/2 ஏக்கர் நிலம் வைத்து கொள்வதாகவும் அதற்கு பின்னிட்டு பிரித்துக் கொள்வதாக என்னிடம் கூறினார் என்றால் சரிதான். ஆனால் இந்த சம்பவத்திற்கு பின்னிட்டு தான் ஏற்படும் விவரங்கள் அனைத்தும் ஒன்றாம் எதிரி சொன்னார். நான் சொல்வது தவறு என்றாலும் இந்த வழக்கிற்கு முன்பே எனது மாமனார் என்னிடம் நிலம் பிரிப்பது தொடர்பாக பேசினார் என்றாலும், நான் ஒத்துக் கொள்ளாததால் தான் அவர் மீது பொய் புகார் கொடுத்து அந்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தற்போது வரை எனது மாமனார் எனது குழந்தைகளின் பெயரில் ½ ஏக்கர் நிலம் எழுதி வைக்க தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. நான் போலீஸார் விசாரணையின் போது எதிரிகள் எனது அம்மாவை அடித்ததாக கூறவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எனது மாமனார் சொத்தை பிரித்து தராததால்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.05 17:42:54 +0530

தான் அவர் மீது நான் பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.08.05 17:42:59 +0530

Sd/- (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**